1989 ஏப்ரல் 7]

(ஈ) பேரவை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் பற்றிய மரபு.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் அவருக்கு முன்னால்இருக்கின்ற ஒலிபெருக்கியில் தான் பேசவேண்டும் என்பது நம்முடைய மரபு ஆகும்; விதியும் ஆகும். இது அமைச்சர்களுக்கும் பொருந்துமா? நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதிலே எனக்கு ஒன்றும் குறையில்லை. அந்த மரபைத் தெரிந்து கொள்வதற்குத்தான் கேட்கிறேன். விதிமுறை அங்கத்தினருக்கும் அமைச்சருக்கும் ஒன்றுதானே. அவரவர்களுடைய இருக்கைக்கு முன்னால் இருக்கின்ற ஒலி பெருக்கியில்தான் பேச வேண்டும் என்பது விதிமுறைதானே என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இடம் மாறித்தான் பேசக் கூடாதே தவிர பக்கத்தில் இருப்பதைப் பார்த்து ஒட்டிப் பேசலாம்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய இருக்கையிலே இருக்கும் மைக்கிலேதான் பேச நினைத்தேன். ஆனால் இங்கே விளக்கு எரியாமல் இருந்தது. அங்கே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆகவே அங்கே சென்று பேசினேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். நான் கொடுத்து மூன்று நாட்கள் ஆகின்றன அது இருக்கிறதா அல்லது வங்காள விரிகுடாவிலே போய் விழுந்து விட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அறையிலே பார்த்துச் சொல்கிறேன்.